

JUGEND UND MEDIEN

NATIONALES PROGRAMM ZUR FÖRDERUNG VON MEDIENKOMPETENZEN

## இளைஞர்களும் ஊடகங்களும்

ஊடகத் திறமைகளை மேம்படுத்துவதற்கான தேசியத் திட்டம்

பெற்றோருக்கும், சிறுவர்களுடன் செயற்படும் அனைவருக்கும்

# டிஜிட்டல் ஊடகங்களைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துவதற்கான சில குறிப்புகள்

www.jugendundmedien.ch

# சிறுவர்களைப் பாதுகாத்தல், அதாவது டிஜிட்டல் உலகில் வழிகாட்டுதல்

## டிஜிட்டல் ஊடகங்கள் எமது அன்றாட வாழ்வின் ஒரு பகுதி

சிறுவர்களும் இளைஞர்களும் ஒரு வித்தியாசமான ஊடகங்கள் நிறைந்த உலகில் வளர்கின்றனர். தமது ஓய்வு நேரத்தில் அவர்கள் விளையாட்டுக்களை மேற்கொள்கின்றனர், தகவல்களை வழங்குகின்றனர், இணையம் மூலம் தொடர்புகளை ஏற்படுத்துகின்றனர், தமது நண்பர்களுடன் தொடர்பாடுவதற்காகத் தமது கைப்பேசிகளைப் பயன்படுத்துகின்றனர். 12-19 வயதை அடைந்தோரில் 80 சதவீதமானோர் தமது சொந்த ஸ்மார்ட்போன்களைக் கொண்டுள்ளமையால், இணையத்தை எந்நேரமும் தமது கைகளில் கொண்டுள்ளனர். முன்பள்ளி மாணவர்களோ டிஜிட்டல் ஊடகத் தொடர்பை எப்போதும் நேரகாலத்துடனே பெற்றுக் கொள்கின்றனர்.

## டிஜிட்டல் ஊடகங்கள் வாய்ப்புக்களை மாத்திரமன்றி, ஆபத்துகளையும் ஏற்படுத்துகின்றன

அது வாழ்க்கையில் எல்லாவற்றையும் போன்றதே. எங்கெல்லாம் வாய்ப்புக்கள் உள்ளனவோ அங்கெல்லாம் ஆபத்துகளும் உள்ளன. இணையம் தன்னுள் அடிமைப்படுத்தலாம், சிறுவர்களும் இளைஞர்களும் சமூக வலையமைப்புகளில் அடாவடித்தனம் செய்யலாம், உங்களது தனிப்பட்ட தரவுகள் தவறாகப் பயன்படுத்தப்படலாம், பாலியல் தாக்குதல்களுக்கு வழிகோலலாம்.

*“இந்த ஆபத்துகளிலிருந்து நான் எனது பிள்ளையை எப்படிப் பாதுகாக்கலாம்? எந்த வயதில் எவ்வளவு ஊடக நேரம் கொடுப்பது நியாயமானதாகும்? “*

இத்தகைய கேள்விகளைக் கேட்பதற்கு பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் உரிமையுள்ளது.

## சிறுவர்கள் டிஜிட்டல் ஊடகங்களை அவதானமாகக் கற்றுக்கொள்ள வேண்டும்

ஒரு விடயம் உறுதியானது: புதிய ஊடகங்களுடன் சிறுவர்கள் தொடர்புபடுவதைத் தடுப்பது சாத்தியமானதோ, அறிவானதோ அல்ல. அவை இப்போது அன்றாடப் பாடசாலை மற்றும் தொழிற்றுறை வாழ்வின் முக்கிய பகுதிகளாகக் காணப்படுகின்றன. அவை கற்றலுக்கும் அபிவிருத்திக்கும் பல வாய்ப்புகளையும் வழங்குகின்றன.

எனவே இளைஞர்கள் உள்ளடக்கங்களை அலசி ஆராய்ந்து மதிப்பிடவும், சாத்தியமான இடர்களை அடையாளம் காணவும், தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் கற்றுக்கொள்வது முக்கியமாகும். அவர்களுக்குச் செவிமடுப்பது, அவர்களின் விடயங்களில் பங்குபற்றுவது என்பன மூலம் பெற்றோரும் ஆசிரியர்களும் மேற்பார்வை செய்வதில் ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றனர்.

## ஊடக உலகில் செயலூக்கமான வழிகாட்டல் பெரியோரிடமிருந்து சிறியோருக்குத் தேவைப்படுகிறது

டிஜிட்டல் ஊடகங்களைப் பயன்படுத்துவதில் சிறுவர்களினதும் இளைஞர்களினதும் வயதுக்கேற்றவாறு ஊக்கமாகவும் பொருத்தமானவாறும் வழிகாட்டுமாறு நாம் பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் தூண்டுகிறோம். அன்றாடம் கற்றலில் பின்பற்ற வேண்டிய ஆகவும் முக்கியமான குறிப்புகளை இந்த ஏடு சுட்டிக் காட்டுகிறது.

# பொன்னான விதிகள்

**சேர்ந்தியங்குவது தடுப்பதை விடச் சிறந்தது.**

டிஜிட்டல் அனுபவத்தைப் பெறுவதில் சிறுவர்கள் பெற்றோரின் வழிகாட்டலைப் பெற வேண்டும். ஊடகங்கள் தொடர்பில் அவரது அனுபவத்தைப் பற்றி உங்களது பிள்ளையுடன் பேசுங்கள்.

**ஊடக அறிவுள்ள முன்னுதாரணங்கள் சிறுவர்களுக்குத் தேவை.**

ஊடகங்கள் தொடர்பில் சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் ஆசிரியர்களே சிறந்த முன்னுதாரணங்கள். எனவே ஊடகங்களிலான உங்களது சொந்த நடத்தைகளைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

**3-6-9-12 விதி**

3 வயதுக்குக் கீழ் எந்தத் திரையும் வேண்டாம், 6 வயது வரை தனியான டிஜிட்டல் விளையாட்டுக் கருவி வேண்டாம், 9 வயது வரை இணையம் வேண்டாம், 12 வயது வரை கண்காணிப்பற்ற இணையம் வேண்டாம்.

**வயதுக் கட்டுப்பாட்டைக் கவனியுங்கள்.**

திரைப்படங்களுக்காக (jugendundmedien.ch) வீடியோ விளையாட்டுக்களுக்காக (pegi.ch)

**திரை நேரங்களை ஒன்று சேர்ந்து அமைத்துக் கொள்ளுங்கள்.**

உங்களது பிள்ளை ஒரு நாளில் அல்லது வாரத்தில் எவ்வளவு நேரம் திரைக்கு முன்னே இருக்க வேண்டும் என்பதை அவருடன் சேர்ந்து தீர்மானித்துக் கொள்ளுங்கள். தெளிவான வரையறைகளை அமைத்துக் கொள்வதுடன், அவை மதிக்கப்படுவதையும் உறுதி கொள்ளுங்கள்.

**திரைகள் பிள்ளைப் பராமரிப்பாளர்களல்ல**

டிஜிட்டல் ஊடகங்களற்ற பொழுதுபோக்குச் செயற்பாடுகளை வழங்குங்கள்.

**தொலைக்காட்சி, கணனி, டிஜிட்டல் விளையாட்டுக் கருவி என்பன முன்பள்ளிகளுக்கு உரியவையல்ல.**

கருவியை ஒரு பொது அறையில் வைத்திருங்கள். ஸ்மார்ட்போன்களிலும் வரைபட்டிகைக் கணனிகளிலும் ஒரு கண் வைத்திருங்கள்.

**உங்களது பிள்ளை யாருடன் அரட்டையடிக்கிறார் என மிகச் சரியாகப் பார்த்துக் கொள்ளுங்கள்.**

பிள்ளைகள் இணையம் மூலம் அறிமுகமானோரைச் சந்திப்பதாயின் பெரியவர் ஒருவருடன் சேர்ந்தும், பொது இடங்களிலும் மாத்திரமே சந்திக்க வேண்டும்.

**வலையமைப்பில் உள்ள தனிப்பட்ட தரவுகளில் கவனமாயிருங்கள்.**

பெயர், முகவரி, வயது, தொலைபேசி இலக்கம் போன்ற தனிப்பட்ட தகவல் எதனையும், அதைப் பற்றி உங்களுடன் ஏற்கனவே கலந்துரையாடாமல் வெளிப்படுத்த வேண்டாம் என உங்களது பிள்ளையிடம் கூறுங்கள்.

**வடிகட்டும் மென்பொருட்களை விட, திறந்த நிலைக் கலந்துரையாடல்கள் சிறந்தவை.**

வயதுக்கேற்ற வகையில் பாலியலையும் வன்முறையையும் பற்றி உங்களது பிள்ளையுடன் பேசுங்கள். வடிகட்டும் மென்பொருட்கள் பயனுள்ளவை எனினும், அவை முழுமையான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில்லை.

இந்த விதிகள் 0-13 வயது வரையான பிள்ளைகளைக் கொண்ட பெற்றோருக்கு விசேடமாக அமைக்கப்பட்டவையாகும். இவற்றில் சில இளைஞர்களைக் கண்காணிக்கவும் உதவுபவை.

# மேலதிக தகவல்களுக்கு

- இணையத்தில்: **www.jugendundmedien.ch**
- உங்களது பிரதேசத்தில் தகவல் மற்றும் ஆலோசனைச் சேவைகள்: www.jugendundmedien.ch/beratung-und-angebote
- “ஊடக அறிவு - டிஜிட்டல் ஊடகங்களைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துவதற்கான சிறந்த குறிப்புகள;“ கையேட்டை இலவசமாக PDF வடிவில் www.jugendundmedien.ch இல் பெறுக அல்லது மின்னஞ்சல் மூலம் பெறத் தொடர்பு கொள்க: verkauf.zivil@bbl.admin.ch (வேண்டுகோள் இலக்கம் 318.850 d, f, i)

## தேவைப்படின்

- அவசர நிலையில் பெற்றோர் அழைக்க 0848 35 45 55, www.elternnotruf.ch
- www.147.ch – நாள் முழுவதிலும் தொலைபேசி, குறுந்தகவல் மற்றும் அரட்டை மூலம் சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் இலவச, பெயர் குறிப்பிடாத ஆலோசனை வழங்கலுக்கு

**இளைஞர்களும் ஊடகங்களும்** என்பது ஊடக அறிவை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டமாகும். டிஜிட்டல் ஊடகங்களைக் கையாள்வதில் சிறுவர்களும் இளைஞர்களும் பாதுகாப்பாகவும் பொறுப்புணர்ச்சியுடனும் இருப்பதே இதன் நோக்கம். இத்திட்டம் சிறுவர்களையும் இளைஞர்களையும் நன்கு கண்காணிப்பதற்கான தகவல்களையும், ஆதரவையும், ஆலோசனையையும் பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும், தொழில் வல்லுநர்களுக்கும் வழங்குகிறது.

சமஷ்டி சமூகக் காப்புறுதி அலுவலகம் இத்திட்டத்தில் சமஷ்டி அவையின் சார்பாகவும், ஞறளைளஉழஅ யுபு இன் சுவிட்சர்லாந்து சேர்ந்தியங்கல் கேளிக்கைச் சங்கம் மற்றும் ஜேக்கப்ஸ் பவுண்டேஷன் என்பவற்றுடன் இணைந்து செயற்படுகிறது.

விநியோகம்:
BBL, வெளியீடுகள் விநியோகம், CH-3003 Bern
www.bundespublikationen.admin.ch,
verkauf.zivil@bbl.admin.ch
இலக்கம் 318.851.tam 2.2013 2’000 860304993

© 2013 இளைஞர்களும் ஊடகங்களும், ஊடக அறிவை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டம், சமஷ்டி சமூகக் காப்புறுதி அலுவலகம், சிறுவர் மற்றும் இளைஞர் விவகாரங்கள் பிரிவு

சூரிச்சின் பிரயோக விஞ்ஞானங்கள் பல்கலைக்கழகத்தில் (ZHAW) பேராசிரியர் கலாநிதி தானியேல் சுவீட் அவர்களின் தலைமையிலான ஊடக உளவியல் குழுவின் ஒத்துழைப்புடனேயே இந்தப் பொன்னான விதிகள் உருவாக்கப்பட்டன.

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Eidgenössisches Departement des Innern EDI
**Bundesamt für Sozialversicherungen BSV**

Zürcher Hochschule
für Angewandte Wissenschaften
zhaw Angewandte Psychologie